**செய்தி வெளியீடு எண்: 769** **நாள் 23.12.12**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், குஜராத் சட்டமன்றப் பொதுத் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றதையடுத்து, குஜராத் மாநில முதலமைச்சர் திரு. நரேந்திர மோடி அவர்களை 20.12.2012 அன்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்கள்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சரவை பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு குஜராத் முதலமைச்சர் திரு. நரேந்திர மோடி அவர்கள் அழைப்புக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்கள்.

குஜராத் முதலமைச்சர் திரு. நரேந்திர மோடி அவர்களின் அழைப்பினை ஏற்று, 26.12.2012 அன்று அகமதாபாத் சென்று குஜராத் மாநில முதலமைச்சர் திரு. நரேந்திர மோடி தலைமையில் புதிதாக அமையவுள்ள அமைச்சரவை பதவியேற்பு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 23.12.2012.